மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 47/2012 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | ரத்தினவேலு | நாள் | 30.01.2023 |
| தகப்பனார் பெயர் | மாரிமுத்து சாமியார் | | |

**1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.3 குறுக்கு விசாரணை :-**

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் கிடைக்கப்பெறவில்லை. நான் 2ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் தற்போது இவ்வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2) எனக்கு தமிழ் ஓரளவிற்கு எழுத படிக்க தெரியும். என் பிரமாண வாக்குமூலத்தில் 3ம் பக்கத்தில் உள்ள 2-வது பாராவில் உள்ள 2-வது வரியில் Null and void என கூறப்பட்டுள்ள ஆங்கில வார்த்தைக்கான அர்த்தம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

3) என் தரப்பில் என் முதல் விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்ட Ex.X1 கிரய ஆவணத்தில் நான் கருப்பண்ணன் என்பவருக்கு விற்பனை செய்ததாக கண்டுள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால், ச.எண்.325 ஆகும். அதன் பரப்பளவு எவ்வளவு என்றால், 1 ஏக்கர் 61 செண்டுகள் ஆகும்.

4) இவ்வழக்கில் வாதிகள் யார் யார் என்றால், வெங்கடாச்சலம், அய்யந்துரை, சுப்ரமணியம் மற்றும் அவர்களது வாரிசுகள் ஆகியோர்கள் வாதிகள் ஆவார்கள். வாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்துதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், அதேபோல் அம்சவள்ளி என்பவர் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5) நான் மேற்படி 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை கருப்பண்ணனுக்கு விற்று எவ்வளவு காலம் ஆகிறது என்றால் 1977ம் ஆண்டு நான் விற்பனை செய்தேன். ச.எண்.325ல் நான் மேற்படி கருப்பண்ணனுக்கு 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை விற்பனை செய்தது போக எனக்கு மேற்படி சர்வே எண்ணில் மீதி நிலம் உள்ளதாக நான் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

6) மேற்படி 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்திற்கு வடக்கில் யாருடைய நிலம் உள்ளது என்றால், சுப்ரமணியம், அய்யந்துரை, வெங்கடாச்சலம், ராஜேந்திரன் ஆகியோர்களது நிலம் உள்ளது. மேற்படி 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்திற்கு தெற்குபுறத்தில் பழனி, குப்பாயி, நல்லதம்பி ஆகியோர்களது நிலம் உள்ளது. மேற்படி நிலத்திற்கு கிழக்கு புறம் ஆறுமுகம் வகையறாவின் நிலம் உள்ளது. மேற்படி நிலத்திற்கு மேற்குபுறம் சுப்ரமணியம், அய்யந்துரை, ராஜேந்திரன் ஆகியோர்களது நிலம் உள்ளது.

7) என் பிரமாண பத்திரிக்கையில் முதல் பக்கத்தில் நான் பாகபிரிவினை பத்திரம் 3432/2008 ல் "B" செட்யூல் சொத்தான 12 அடி அகல வண்டி தடம் குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் 1977ம் ஆண்டு நான் கருப்பண்ணனுக்கு கிரயம் கொடுத்த Ex.X1 கிரய ஆவணத்தில் மேற்படி 12 அடி வழித்தடம் குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

8) வாதிகள் என் இளைய சகோதரர் மகாலிங்கத்தின் வாரிசுகள் ஆவார்கள். என் இளைய சகோரர் மகாலிங்கத்திற்கு மேற்படி ச.எண்.325/1ல் எவ்வளவு நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், 1 ஏக்கர் 68 செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி 1 ஏக்கர் 68 செண்ட் நிலத்தை 2008ம் வருடத்தில் மகாலிங்கத்தின் வாரிசுகளான ராஜேந்திரன், சுப்ரமணியம், அய்யந்துரை, வெங்கடாச்சலம் ஆகியோர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள்.

9) நான் 1977ம் ஆண்டு கருப்பண்ணனுக்கு விற்பனை செய்த 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்திற்கு தெற்குபுறத்தில் நல்லதம்பி மற்றும் பழனி ஆகியோர்களது நிலம் உள்ளது. மேற்படி பழனி நிலத்தின் தெற்குபுறத்தில் உள்ள நிலம் தான் என் இளைய சகோதரர் மகாலிங்கத்திற்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 68 செண்ட் நிலம் என்றால், சரியல்ல.

10) Ex.X1 கிரய ஆவணத்தில் நான் கருப்பண்ணனுக்கு விற்பனை செய்த 1 ஏக்கர் 61 செண்ட் நிலமானது நல்லதம்பி மற்றும் குப்பாயம்மாளின் நிலத்திற்கும் –வடக்கில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

11) மேற்படி பாகபிரிவினையின் படி ச.எண்.325/1 ல் மகாலிங்கத்தின் 3–வது மகன் வெங்கடாச்சலத்திற்கு ஒதுக்கப்பட்ட பாக அளவு எவ்வளவு என்றால், 43 செண்டுகள் ஆகும். இதில் கிணறு, உத்தி, வாய்க்கால் சகிதம் அடங்கும். வெங்கடாச்சலத்திற்கு ஒதுக்கப்பட்ட மேற்படி 43 செண்டு நிலமானது ச.எண்.325/1A ல் தனிப்பட்ட நான்கு செக்குபந்தி விவரங்களுக்குள் வருகிறது என்றாலும், நான் சொல்லும் கிணறானது ச.எண்.325/1B ல் அமைந்துள்ளது என்றாலும், அதுகுறித்து எனக்கு சரியாக தெரியாது.

12) தற்போது என்னிடம் காட்டப்படும் Ex.A1 பாகபிரிவினை ஆவணத்தில் 16–வது பக்கத்தில் D செட்யூலில் 43 செண்ட் நிலத்திற்கு செக்குபந்தி விவரங்கள் அய்யந்துரை பாக நிலத்திற்கு – கிழக்கு, ரோட்டிற்கும் – தெற்கு, சுப்ரமணியம் பாகநிலத்திற்கு– மேற்கு, பழனி நிலத்திற்கும் – வடக்கு, இதன் மத்தியிலுள்ள மேற்கண்ட நிலமும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.3 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.